செய்தி வெளியீடு எண்: 197 நாள் : 20.04.2016

**ஆவணம் இல்லாமல் கொண்டு சென்ற ரூ.80 லட்சம் மதிப்பிலான தங்கம் , ரூ.1.17 கோடி மதிப்பிலான மதுவகைகள் பறிமுதல் – பறக்கும்படை, கண்காணிப்புக் குழுவினர் பறிமுதல் செய்த மொத்த தொகை ரூ.28.95 கோடி**

தமிழ்நாட்டில் தேர்தல் தேதி அறிவித்ததிலிருந்து நன்னடத்தை விதிமுறைகள் கடைபிடிக்கப்பட்டு வருகின்றன. பறக்கும் படையினரும், நிலையான கண்காணிப்புக் குழுவினரும் அவ்வப்போது சோதனை நடத்தி உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு சென்ற ரொக்கம் மற்றும் பல்வேறு பொருட்களை பறிமுதல் செய்து உரிய விசாரணைக்குப்பின் முறையாக இருந்தால் உரியவர்களிடம் பொருள் ஒப்படைக்கப்படுகிறது.

இதன்படி, 16.04.16 அன்று பறக்கும்படை சோதனையில் திருவண்ணாமலையில் 100 அரிசி மூட்டைகளும், ரூ.27 லட்சம் மதிப்புள்ள 15,976 ஜதை செருப்புகளும், திண்டுக்கல்லில் ரூ.1.04 லட்சம், மதுரையில் ரூ.3 லட்சம் ரொக்கம் ஆகியவையும், கடலூரில் ரூ.80,24,543/– மதிப்பிலான 952.43 கிராம் தங்க நகைகளும், 17.4.16 அன்றைய சோதனையில், வேலூரில் ரூ.4.45 லட்சம் மதிப்பிலான பல்வேறு அரசியல் கட்சி கொடிகள், திருநெல்வேலியில் ரூ.13.50 லட்சம் ரொக்கம், திண்டுக்கல்லில் ரூ.2.33 லட்சம் ரொக்கம் உட்பட மொத்தம் ரூ.26,51,990/– பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் 18.4.16 சோதனையின்போது வேலூரில் ரூ.16.43 லட்சம் மதிப்பிலான 90 பான்பராக் பெட்டிகள், திருவண்ணாமலையில் ரூ.7.43 லட்சம் மதிப்பிலான டைட்டன் வாட்ச்கள், கரூரில் ரூ.3.25 கோடி ரொக்கம் உட்பட மொத்தம் ரூ.3.46 கோடி பறிமுதல் செய்யப்பட்டது. இதுவரை பறக்கும் படையினரால் ரூ.13,60,33,220/– ரொக்கம் கைப்பற்றப்பட்டது.

மேலும், நிலையான கண்காணிப்புக்குழு சோதனை மேற்கொண்டபோது 16.4.16 அன்று வேலூரில் ரூ.1.40 லட்சம் மதிப்புள்ள 2.25 டன் பாமாயில், ரூ.16 லட்சம் மதிப்புள்ள பெயிண்ட் வகைகள், ரூ.2.39 லட்சம் ரொக்கம் என மொத்தம் ரூ.10,85,030/– ரொக்கமும் 17.4.16 அன்றைய சோதனையில் கோவை மாவட்டத்தில் ரூ.3.48 லட்சம் மதிப்பில் கேரளா லாட்டரி சீட்டுகளும், திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.1.17 கோடி மதிப்பிலான மதுவகைகள் மற்றும் ரூ.9 லட்சம் ரொக்கம், ஆந்திர மாநிலத்திலிருந்து வந்தவர்களிடமிருந்து ரூ.15 லட்சம், காஞ்சிபுரத்திலிருந்து ஆவணங்கள் இல்லாது கொண்டு சென்ற ரூ.39 லட்சம் உட்பட மொத்தம் ரூ.69,87,036/– ரொக்கம் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும் 18.4.16 அன்றை சோதனையில் கடலூரில் ரூ.2.50 லட்சம், சிவகங்கையில் 2.47 லட்சம், நாமக்கல்லில் ரூ.4.74 லட்சம், விருதுநகரில் ரூ.5.64 லட்சம் மதிப்பில் போட்டோவுடன் கூடிய பிளாஸ்டிக் கார்டுபோர்டு கைப்பற்றப்பட்டது. இதுவரை இக்குழுவினரால் கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூ.15,34,43,275/– ஆகும்.

உரிய அனுமதியில்லாமல் சாலை பணிகளை மேற்கொண்டது, வாகனத்தில் பிரச்சாரம் மேற்கொண்டது, அனுமதியில்லாமல் சுவர் விளம்பரம், அனுமதியின்றி கட்சி கூட்டம் நடத்தியது, தேர்தல் பிரச்சாரத்தில் பட்டாசுகள் வெடித்தது போன்ற காரணங்களுக்காக பல்வேறு அரசியல் கட்சியினர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**